Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 07 2025

வெள்ளிக்கிழமை, 07 பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 154 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



### வித்தியா படுகொலை தீர்ப்பு:
## மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க திகதி குறிப்பு

கடந்த 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகளால் மரண தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

குறித்த மேன்முறையீட்டு மனுக்கள் வியாழக்கிழமை(06) நீதிபதிகள் பிரீத்தி பத்மன் சூரசேன,

தொடர்ச்சி P2




## உப்பு விலையை அதிகரிக்க தீர்மானம்

உப்பு விலையை அதிகரிக்க ஹம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் உப்பின் விலை அதிகரித்ததன் காரணமாக இவ்வாறு விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, 400 கிராம் உப்பு பக்கட் ஒன்றின் விலை 100 ரூபாவில் இருந்து 20 ரூபாவால் அதிகரித்து 120 ரூபாவாகவும், ஒரு கிலோ கல் உப்பு பக்கட் ஒன்றின் விலை 60 ரூபாவால் அதிகரித்து 120 ரூபாவில் இருந்து 180 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# லசந்தவின் படுகொலையாளி யார்?



ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவை படுகொலை செய்த கொலையாளிகள் யார் என்பதை அரசாங்கம் உடனடியாக வெளிக்கொண்டுவர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) விசேடக்கூற்றை முன்வைத்தே இத்தனை வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன். இத்தகைய தருணத்தில், இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன? மற்றும் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும்.

இது தொடர்பாக வெளிப்படையான விசாரணையை நடத்தி, அவர்களது குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியாயத்தை நிலைநாட்டி, கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள். லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## அர்ச்சுனாவுக்கு கடும் எச்சரிக்கை





தனது அறிவித்தலையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட யாழ். மாவட்ட சுயேட்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனை படைக்கல சேவிதர்களை கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஷ்விசாலி கடுமையாக எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (6) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதமரிடத்தில் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது சபாபீடத்தை அவமதிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் வசனமொன்றை வெளியிட்டதாக ஏற்பட்ட சர்ச்சையின் போது அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்டமையினால்

தொடர்ச்சி P2

## இஸ்லாமிய மத நூல்கள் இறக்குமதிக்கு தடையில்லை



இஸ்லாமிய மத நூல்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு எந்த தடை உத்தரவும் விதிக்கப்படவில்லை. நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அடிப்படைவாத புத்தகங்கள் இந்த நாட்டுக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருவதுடன் காலத்துக்கு ஏற்ற தரவுகள் மீளாய்வு செய்யப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.

தொடர்ச்சி P2

## அரச வேலை தேடும் மக்களே அவதானம்



அரசாங்கத்தின் இலட்சினையைப் பயன்படுத்தி மோசடியான வேலை விளம்பரங்கள் அதிகரித்து வருவதுடன், தனிப்பட்ட தரவு திருட்டு அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களில் இதுபோன்ற பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவின் சிரேஸ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருகா தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் இலட்சினையை பயன்படுத்தி மோசடியான விளம்பரம் ஒன்று தற்போது சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வருவதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## "சட்டமா அதிபரின் பரிந்துரை லசந்த கொலை தொடர்பானது அல்ல"



சமூக ஊடகங்களிலும், பிரபல ஊடகங்களிலும் சமீபத்தில் சீற்றத்தைத் தூண்டிய மூன்று சந்தேக நபர்களை விடுவிப்பது குறித்த சட்டமா அதிபரின் (AG) சட்டக் கருத்து, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடையது அல்ல. மாறாக, அது விக்ரமதுங்கவின் ஓட்டுநர் கடத்தப்பட்டது மற்றும் அவரது கள குறிப்பேடு காணாமல் போனது தொடர்பானது என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

லசந்த விக்ரமதுங்கவின் ஓட்டுநர் கடத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை மற்றும் அவரது கள குறிப்புப் புத்தகம் காணாமல் போனது தொடர்பான அனைத்து விடயங்களையும் பொலிஸார் அதே B அறிக்கை எண்,

தொடர்ச்சி P2

## மஹிந்தவின் மனு மீதான விசாரணை திகதி அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புப் படையினரை 60 அதிகாரிகளாகக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதன்படி குறித்த மனுவை எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாக கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## தனியார்த்துறை பட்டப்படிப்பு தொடர்பில் விசேட கவனம்

தனியார் நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் பட்டப்படிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத்தெரிவித்த பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சட்ட பீடம் ஸ்தாபிப்பதற்கான பரிந்துரைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்ப ட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்த விஜேஸ்ரீ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



### மனித- யானை மோதலில்
## 3,477 யானைகள், 1,190 பேர் பலி

இலங்கையில் 2015ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான 9 ஆண்டு காலப் பகுதியில் மனித-யானை மோதலினால் 3477 காட்டு யானைகளும் 1190 மனிதர்களும் உயிரிழந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.

தொடர்ச்சி P2



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:
## பிள்ளையான் மீதான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சிறைத்தண்டனை அனுபவித்தவேளை, பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான பிள்ளையான் என அறியப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான திட்டமிடலில் ஈடுபட்டார் என பிள்ளையானின் செயலாளர்களில் ஒருவரான ஆசாத்மௌலானா என்பவர் செனல் 4இற்கு தெரிவித்தார் என அந்த அதிகாரி டெய்லிமிரருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகள் ஆரம்பித்துள்ளனர்.

மௌலானா ஏற்கெனவே இது குறித்த விபரங்களை செனல் 4இற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் தெரிவித்திருந்தார்.

இது குறித்து டெய்லி மிரர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் தொடரும் அதேவேளை தேசிய புலனாய்வு பிரிவிற்காக பணியாற்றிய முன்னாள் உயரதிகாரிகள் சிலருக்கு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சிவனேசதுரை சந்திரகாந்தன் குறித்து குற்றச்சாட்டுகளை முன்வைத்த அவரது செயலாளர்களில் ஒருவரான ஆசாத்மௌலானவுடன் தொடர்பில் உள்ளதாக தெரிவித்துள்ள இந்த அதிகாரிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சிறைத்தண்டனை அனுபவித்தவேளை பிள்ளையான் சிறையிலிருந்தவாறே

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க திகதி குறிப்பு

ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, நீதிமன்றத்தின் முன் விடயங்களை முன்வைத்து, குறித்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் திகதியை நிர்ணயிக்குமாறு கோரினார்.

அதன்படி, மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், சம்பந்தப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களை ஒகஸ்ட் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டது.

## அரச வேலை தேடும் மக்களே அவதானம்



வேலை வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறி அந்த விளம்பரம் பரப்பப்பட்டுள்ள நிலையில், அது ஒரு போலியான விளம்பரம் என்று இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டுகிறது.

மேலும், கடந்த சில நாட்களாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் இலட்சினையை பயன்படுத்தி இதேபோன்ற வேலை வாய்ப்பு விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்று அரசின் இலட்சினையை பயன்படுத்தி வெளியிடப்படும் போலி விளம்பரங்களுக்கு பதிலளிப்பது பொருத்தமற்றது என இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவின் சிரேஸ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருகா தமுனுபொல சுட்டிக்காட்டியுள்ளார்.

"போலி வலைத்தளங்கள் மூலம் பெரும்பாலும் உங்கள் தேசிய அடையாள அட்டையின் நகல்கள், கடவுச்சீட்டு நகல்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்கள் போன்ற தனிப்பட்ட தகவல்களைத் திருடுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எந்த சூழ்நிலையிலும் நீங்கள் அத்தகைய வலைத்தளங்களைப் பார்வையிட்டு உங்கள் தனிப்பட்ட தகவல்களை வழங்கக்கூடாது" என்றார்.

## "சட்டமா அதிபரின் பரிந்துரை லசந்த கொலை தொடர்பானது அல்ல"

B/92/2009 இன் கீழ் பதிவு செய்துள்ளதால், சிஐடிக்கு சட்டமா அதிபர் எழுதிய கடிதத்தைச் சுற்றியுள்ள குழப்பம் தோன்றியுள்ளதாக வட்டாரங்கள் டெய்லி மிரருக்குத் தெரிவித்தன. இந்த சம்பவங்கள் விக்கிரமதுங்கவின் கொலையுடன் மறைமுகமாக தொடர்புடையவை.

2015ஆம் ஆண்டில், லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அவரது ஓட்டுநர், சிஐடியிடம் வாக்குமூலம் அளிக்கும் போது, 2009ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு அடையாளம் தெரியாத குழுவால் அவர் கடத்தப்பட்டதாக தெரிவித்தார். இருப்பினும், இந்த வாக்குமூலத்திற்கு முன்னர் ஓட்டுநரின் கடத்தல் குறித்து எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லை என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓட்டுநரின் விளக்கத்தின் அடிப்படையில், அவரை அடைத்து வைத்ததாக கூறப்படும் குற்றவாளிகளில் ஒருவரின் உருவப்படம் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது. பின்னர், சந்தேக நபர்களை அடையாளம் காணும் அணிவகுப்பின் போது அவர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டார். இருப்பினும், சந்தேக நபரின் பெயர் மற்றும் உருவப்படம் அணிவகுப்புக்கு முன்பே ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பிரச்சினையை விசாரணையின் போது சந்தேக நபரின் சட்டத்தரணி எழுப்பினார்.

அடையாள அணிவகுப்புக்கு ஒரு மாதத்திற்குப் பிறகு, ஓட்டுநர் தானாக முன்வந்து நீதவான் முன் வாக்குமூலம் அளித்தார், அடையாள அணிவகுப்புக்கு முன்னர் சந்தேக நபர் உட்பட பல நபர்களை சிஐடி தனக்குக் காண்பித்ததாக கூறினார்.

> **மோட்டார் சைக்கிள்களில் வந்த முகமூடி அணிந்த நபர்களால் லசந்த கொடூரமாக கொலை செய்யப்பட்டார்**

ஆதாரங்களின் அடிப்படையில், இது பிற ஏற்புடைய வழக்குகளிலும் அடையாள அணிவகுப்பின் சாட்சிய மதிப்பைக் கணிசமாக பலவீனப்படுத்தியது.

மற்ற இரண்டு சந்தேக நபர்களான இரண்டு பொலிஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், லசந்த விக்ரமதுங்கவைப் பின்தொடர்ந்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களின் பதிவு எண்களைக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் களக் குறிப்பேடு காணாமல் போனதில் குறித்த பொலிஸ் அதிகாரிகளின் பங்கு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆகும்.

அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர போதுமான ஆதாரங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் விளக்கின. புலனாய்வாளர்கள் குறிப்பேட்டு அட்டையின் ஒரு பிரதியை மட்டுமே மீட்டனர், மேலும் அதில் எழுதப்பட்ட பதிவு எண்கள் எந்த சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களையும் அடையாளம் காண வழிவகுக்கவில்லை.

வழக்கை நிறுவ போதுமான ஆதாரங்கள் இல்லாமல் அல்லது தண்டனை பெறுவதற்கான நியாயமான வாய்ப்பு இல்லாமல், சட்டமா அதிபர் மூன்று சந்தேக நபர்களையும் விடுவித்து மேலும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர வேண்டாம் என்று முடிவு செய்ததாக அந்த வட்டாரங்கள் வலியுறுத்தின.

> **தண்டனை பெறுவதற்கான நியாயமான வாய்ப்பு இல்லாமல், சட்டமா அதிபர் மூன்று சந்தேக நபர்களையும் விடுவித்து மேலும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர வேண்டாம்**

தேவையான ஆதாரங்களின் தரத்தை பூர்த்தி செய்யாமல் சட்டமா அதிபர் யாரையாவது குற்றஞ்சாட்டினால், அது சவால்களுக்கும் இறுதியில் குற்றவாளிகளின் விடுதலைக்கும் வழிவகுக்கும்.

இத்தகைய விடயங்கள், அரசு தரப்பு தீய எண்ணத்துடன் செயல்பட்டதாகவோ அல்லது பழி சுமத்தும் செயலில் ஈடுபட்டதாகவோ நீதிமன்றம் கருத வழிவகுக்கும் என்று வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இன்றுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் டெய்லி மிரருக்குத் தெரிவித்தன.

"கொலை தொடர்பான எந்தவொரு குற்றச்சாட்டும் பொலிஸார் தங்கள் விசாரணைகளை முடித்து, குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வது குறித்து ஆலோசனை பெற்றவுடன் பரிசீலிக்கப்படும்" என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனவரி 27, 2025 அன்று சிஐடி தலைவருக்கு சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவினால் அனுப்பப்பட்ட ஆலோசனைக் கடிதத்தில், நீதவான் விசாரணை வழக்கு எண் B/92/2009 தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்ட முன்னாள் சர்ஜென்ட் பிரேம் ஆனந்த உடலகம, கல்கிஸ்ஸை பொலிஸின் முன்னாள் குற்றப்பிரிவு அதிகாரி, சப்-இன்ஸ்பெக்டர் திஸ்ஸ சிறி சுகதபால மற்றும் ஓய்வுபெற்ற மூத்த டிஐஜி பிரசன்ன நாணயக்கார ஆகிய மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சுட்டிக்காட்டினார்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதியன்று, ரத்மலானை, அத்திடிய வீதியில் உள்ள தனது அலுவலகத்திற்கு லசந்த விக்ரமதுங்க காரில் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள்களில் வந்த முகமூடி அணிந்த நபர்களால் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.

## உப்பு விலையை அதிகரிக்க தீர்மானம்



இருப்பினும், இந்த விலை உயர்வு தற்காலிக தீர்மானம் என்று ஹம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் வருடாந்த உப்பு தேவை 200,000 மெற்றிக் தொன் என்று கூறப்படுகிறது.

இருப்பினும், கடந்த வருடத்தின் கடைசி காலாண்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக, நாட்டில் உப்பு உற்பத்தி குறைவடைந்தது.

இதன் காரணமாக, அரசாங்கம் உப்பை இறக்குமதி செய்ய முடிவு செய்தது, அதன்படி, 12,000 மெற்றிக் தொன் உப்பு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் ஹம்பாந்தோட்டை உப்புத் தொழிற்சாலையில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளதால், எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் உப்பு விநியோகத்தை மேற்கொள்ள முடியுமென நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் உப்புத் தேவையில் 50 சதவீதத்தை ஹம்பாந்தோட்டை உப்பளத்தின் ஊடாக உற்பத்தி செய்யப்படுகிறது.

அத்துடன், பரந்தன் மற்றும் புத்தளம் உப்பளங்களும் நாட்டின் உப்புத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமிய மத நூல்கள் இறக்குமதிக்கு தடையில்லை

.பியானநிசாம் காரியப்பர் எழுப்பிய பாதுகாப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவை தவிர்ந்த ஏனைய இஸ்லாமிய மத நூல்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமை தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் பதிலளிக்கையில், 2021ஆம் ஆண்டு மே மாதம் பாதுகாப்பு பாதுகாப்பு அமைச்சின் அப்போதைய செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் பாதுகாப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவை தவிர்ந்த ஏனைய இஸ்லாமிய மத நூல்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு எந்த தடை உத்தரவும் விதிக்கப்படவில்லை. ஆனால், 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் அமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்குழுவின் பரிந்துரைக்கமைய அனைத்து மதப் புத்தகங்கள் தொடர்பிலும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மாத்திரம் இடம்பெறுகிறது. குறித்த ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை காரணமாகப் புத்தகம் இறக்குமதியாளர்களுக்கு எந்த சிரமங்களும் ஏற்படுவதில்லை.

> **நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அடிப்படைவாத புத்தகங்கள் இந்த நாட்டுக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருவதுடன் காலத்துக்கு ஏற்ற தரவுகள் மீளாய்வு செய்யப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**

அத்துடன், இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்போது, பாதுகாப்பு அமைச்சினால் எந்த தாமதமும் ஏற்படப்போவதில்லை. ஒழுங்குபடுத்தலின் கீழ் இருக்கும் மீளாய்வு குழுவின் அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டு, 48 மணி நேரத்துக்குள் பதிலளிக்கப்படும்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அடிப்படைவாத புத்தகங்கள் இந்த நாட்டுக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருவதுடன் காலத்துக்கு ஏற்ற தரவுகள் மீளாய்வு செய்யப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கை அனைத்து மத புத்தகங்கள் தொடர்பிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

## அர்ச்சுனாவுக்கு கடும் எச்சரிக்கை

சபாநாயகர் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் குறிப்பிட்ட கருத்தொன்று தொடர்பில் பிரதிசபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் போது, புதன்கிழமை பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பியினால் சபாநாயகரை பார்த்து வெட்கம் என்று கூறிய வசனத்தை சுட்டிக்காட்டியும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சபாபீட ஆசனத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று நேற்று (நேற்று முன்தினம்) எம்.பியொருவர் இந்த ஆசனத்தை பார்த்து 'ஷேம்' என்று கூறி அவமதித்துள்ளார். நான் அவ்வேளையில் இந்த சபையில் இருந்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றார்.

இவ்வேளையில், அர்ச்சுனா எம்.பி அது தொடர்பில் ஏதோ கருத்து தெரிவிக்க முயன்றதுடன், அமைதியற்ற முறையிலும் நடந்துகொண்டார். இதன்போது ஆசனத்தில் அமருமாறும், சபையின் ஒழுக்கத்தை பேணுமாறும் பிரதி சபாநாயகர் அவரை கேட்டுக்கொண்டார். ஆனால், தொடர்ந்தும் அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட நிலையில், நீங்கள் ஆசனத்தில் அமராவிட்டால் படைக்கல சேவிதர்களை கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார். இதனை தொடர்பில் அர்ச்சுனா எம்பி அமைதியாக இருந்தார்.

## 3,477 யானைகள், 1,190 பேர் பலி

எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மனித-யானை மோதலினால் இலங்கையில் 2015 ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான கடந்த 9 வருடங்களில் 3,477 காட்டு யானைகளும் 2015 முதல் 2019 வரை 1466 காட்டு யானைகளும், 2020 முதல் 2024 வரை 2,011 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, காட்டு யானைகளின் தாக்குதலால் கடந்த 9 வருடங்களில் 1,190 மனிதர்களும் உயிரிழந்துள்ளனர்

அதாவது, 2015 - 2019 காலகட்டத்தில் 456 பேரும், 2020 - 2024 காலகட்டத்தில் 734 பேரும் உயிரிழந்துள்ளனர் எனவும் கூறியுள்ளார்.



## தனியார்த்துறை பட்டப்படிப்பு தொடர்பில் விசேட கவனம்

மேலும் அவர் கூறுகையில், இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகிய நான்கு அரச பல்கலைக்கழகங்கள் ஊடாக சட்டமாணி பட்டப் படிப்பு வழங்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக் கழகத்தில் 740 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும், பேராதனை பல்கலைக்கழகத்தில் 197 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 212 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும், திறந்த பல்கலைக்கழகத்தில் 1,625 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்துள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டு தற்போது தரவு கட்டமைப்புக்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. வெகு விரைவில் புதிய சட்டபீடம் ஸ்தாபிக்கப்படும். சட்டக் கல்லூரி கல்வி அமைச்சின் விடயதானத்துக்குள் உள்ளடங்காது. சட்டக் கல்லூரி சுயாதீன முறையில் செயற்படுகிறது.

இதேவேளை, ஒரு சில தனியார் நிறுவனங்கள் எவ்விதமான கொள்கை மற்றும் கண்காணிப்புக்கள் ஏதும் இல்லாமல் செயற்படுகின்றன. பட்டங்களும் வழங்கப்படுகின்றன. ஆகவே, இவ்வாறு செயற்படும் நிறுவனங்கள் தொடர்பில் உயர்கல்வி அமைச்சு மட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வெகு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## மஹிந்தவின் மனு மீதான விசாரணை திகதி அறிவிப்பு

இந்த மனு வியாழக்கிழமை (06) நீதிபதிகளான பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (S.R)

## பிள்ளையான் மீதான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான திட்டமிடலில் ஈடுபட்டார் என ஆசாத்மௌலானா ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் பிரிட்டனின் செனல் 4 தொலைக்காட்சிக்கும் தெரிவித்துள்ளார் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆசாத்மௌலானா தெரிவித்துள்ள விடயங்கள் சி.ஐ.டி. அதிகாரி ரவி செனிவிரட்ண தெரிவித்துள்ள விடயங்களுடன் ஒத்துப்போவதாககூறப்படுகின்றது.

ஆசாத் மௌலானா முன்வைத்த குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சி.ஐ.டியினர் பல தடவை பிள்ளையானை விசாரணை செய்துள்ளதாக தெரிவித்துள்ள சி.ஐ.டியினர் இந்த சதி முயற்சியில் தொடர்புபட்டுள்ளவர்களை விசாரணை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசிங்கம் கொலை தொடர்பில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்தவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்காக ஜஹ்ரான் குழுவினரின் உதவியை பெறுவதற்கு பிள்ளையான் உதவினார் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# கிழக்கு பிரதம செயலாளர் கடமையேற்றார்

ஏ.எச் ஹஸ்பர்

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட டீ.ஏ.சீ.என்.தலங்கம வியாழக்கிழமை (6) அன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

குறித்த நிகழ்வானது திருகோணமலை வரோதயர் நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டீ.ஏ.சீ.என்.தலங்கம இதற்கு முன்னதாக மீன்பிடி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “ஜீவனுக்கு அருகதை இல்லை”

தோட்டத் தொழிலாளர்கள் உடைய பிரச்சினைகளை கதைப்பதற்கு ஜீவன் தொண்டமானுக்கு எந்த அருகதையும் இல்லை என்றும் அவரை தோட்டத் தொழிலாளர்கள் கை கழுவி விட்டனர் எனவும் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே கடற்தொழில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் சில காலமாகத் தேவையில்லாத பீதியைச் சிலர் கட்டமைத்து வருகின்றனர். அதில் ஒன்றாகக் குடி நீருக்கும் ஆபத்து வந்து விட்டது என்ற பீதியைக் கிளப்புகின்றனர்.

இவ்வாறான பீதிகளை உருவாக்குவதற்குக் கடந்த 76 வருடங்களாக நாட்டினுடைய சொத்துக்களைச் சூறையாடியவர்கள், எமது பொருளாதாரத்தைப் பூண்டோடு அழித்தவர்கள் அரச சொத்துக்களை தங்களது சொத்துக்கள் என நினைத்து தங்களது பாட்டன், பூட்டன், மாமன், மச்சான் என எல்லோருக்கும் பகிர்ந்து கொண்ட. அதன்மூலம் கோடீஸ்ரர்களாக, குபேரர்களாக மாறிய நபர்கள் காரண கர்த்தாக்களாக்கவுள்ளனர் எனக்கூறிக்கொண்டிருந்த போது, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் எம்.பி.யுமான ஜீபவன் தொண்டமான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்.

அதில், சானக எம்.பி. ஆதார பூர்வமாக ஒரு அறிக்கை பிரகாரம் குரோமியம் 10 எம்.பியில் இருக்கவேண்டியது 14 எம்.பியில் உள்ளது என நிரூபித்துள்ளார். அதற்கு அமைச்சர் வசந்த சமரசிங்க ஆராய்ந்து பதிலளிப்பதாக கூறியுள்ளார்.

அப்படி இருக்கையில், நீங்கள் பாட்டன், பூட்டன் என பேசிக் கொண்டிருக்கின்றீர்களே என கூறிக் கொண்டிருந்தபோது, அவரின் ஒலிவாங்கி முடக்கப்பட்டுள்ளது.



# இலக்கியக் களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர் வானதி காண்டீபன் தலைமையில் வெள்ளிக்கிழமை(07) மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்கள நிகழ்ச்சியில் எழுத்தாளர் சித்திரலேகா மௌனகுருவின் ‘பெண் நிலைச் சிந்தனைகள்’ எனும் நூலை முன்வைத்து..!” எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவி ஆய்வாளர் எழுத்தாளர் மாதவி உமாசுதசர்மா அவர்கள் உரையாற்றவுள்ளார்.

# பதவி விலகினார் ஹசன் அலி

நூருல் ஹுதா உமர்



ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து எம்.டி.ஹசன் அலி விலகியுள்ளார்.

இது குறித்துத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவுக்கும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தலைவர் பஷீர் சேகு தாவூத்துக்கும் அவர் புதன்கிழமை (05) அன்று கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், கட்சியில் எனது உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினாமா செய்வதை, உடனடியாக அமுலுக்கு வருவதை முறையாக அறிவிக்கின்றேன். இல.30, கடற்கரை வீதி, கல்கிஸ்ஸயில் உள்ள எனது இல்லத்தில் இயங்கிவரும் கட்சி அலுவலகமும் இனி இயங்காது.

கட்சியில் தனது பதவிக் காலம் முழுவதும் எனக்கு அளித்த அனைத்து ஒத்துழைப்புகளுக்கும் கட்சி ஆதரவாளர்கள், தலைமைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிற நலன் விரும்பிகளுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளராக நான் மூன்று தசாப்தங்களாக பதவி வகித்துள்ள நிலையில், உங்களுக்கும் தேர்தல் செயலக ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

நியாயமான மற்றும் நேர்மையான அனைத்து எதிர்கால முயற்சிகளிலும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பெற வாழ்த்துகிறேன் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது வயது மூப்பு, உடல்நிலை என்பவற்றைக் காரணமாகக் கொண்டே இராஜினாமா செய்துள்ளதாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன..




# பேருந்து - லொறி விபத்தில் பெண் ஒருவர் காயம்

சொகுசு பேருந்தும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை (06) காலை 11 மணியளவில் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியின் பிளாக்ஃபுல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டனில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த பேருந்து மீது, எதிர்த் திசையில், நுவரெலியாவில் இருந்து பிளாக்பூல் நோக்கிப் பயணித்த லொறி பிரதான வீதியின் குறுக்கே கவனக்குறைவாகத் திருப்பும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் பேருந்தும் லொறியும் சேதமடைந்துள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# “தலைகீழாக நின்றாலும் முடியாது”

தலைகீழாக நின்று கூறினாலும் எமது அரசாங்கத்தின் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளைச் சுமந்தும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்காது என்று ஆளும் கட்சி பிரதம கொரடாவான அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) நடைபெற்ற புலமைச் சொத்து சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தலைகீழாக இருந்துகொண்டு கூறினாலும் இந்த அரசாங்கத்தின் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு முன்னெடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்காது. நாங்கள் இந்த நாட்டின் மக்களுக்காக நிவாரணங்களை வழங்குவதற்காகவே வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

பழைய அரசாங்கம் போகும் போது எதனையாவது வீசுவதைப் போன்று இந்த அரசாங்கத்தின் மீது வீச முடியாது. அதில் பலனளிக்காது என்றார்.





# நீர் நிலையிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நீர் நிலையில் இருந்து சடலம் ஒன்று வியாழக்கிழமை(06) பகல் மீட்கப்பட்டதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 56 வயதுடைய சேதுநாதபிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை(06) அதிகாலை மீன் பிடிப்பதற்காக வீட்டிலிருந்து குறித்த நபர் புறப்பட்டுள்ள நிலையில் மீன்பிடிக்கச் சென்றவரைப் பகல் வேளையாகியும் காணவில்லை என்பதால் உறவினர்கள் தேடிச் சென்ற போது அவர் நீர் நிலையில் உயிரிழந்த நிலையில் விழுந்து கிடப்பதை அவதானித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் தகவல் வழங்கியதையடுத்து, ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# யாத்திரை சென்றவர் சடலமாக மீட்பு

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்காக சென்ற தனது மனைவியுடன் சீத கங்குள ஆற்றில் குளிக்க சென்ற ஒருவர் உயிரிழந்த சம்பவம் வியாழக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

பசறை பகுதியைச் சேர்ந்த (34) வயதுடைய ருவான் சதுரங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது மனைவி மற்றும் நண்பர்கள் குழுவுடன் புதன்கிழமை (05) அன்று பசறை பகுதியிலிருந்து சிவனொளிபாத மலைக்கு யாத்திரை வந்துள்ளார். வழிபாடுகளில் ஈடுபட்டு வியாழக்கிழமை (06) காலை வாகன நிறுத்தும் இடத்திற்கு வந்தபோது, தனது மனைவியுடன் சீத கங்குள ஆற்றில் குளிக்கச் சென்றுள்ளார். அந்த இடத்தில் ஏராளமான பெண்கள் குளித்துக் கொண்டிருந்ததால், அவர் தனது மனைவியை அந்த இடத்தில் குளிக்கச் சொல்லிவிட்டு, உயர்ந்த பகுதிக்குச் சென்று குளித்துள்ளார்.

நீண்ட நேரம் சென்றும் தனது கணவன் திரும்பி வராததால் இது தொடர்பில் மனைவி நல்லதண்ணிய பொலிஸாருக்குத் தெரிவித்ததையடுத்து காணாமல் போன நபரைத் தேடும் நடவடிக்கையை மேற்கொண்ட நிலையில் அவரது சடலம் சீத கங்குள ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக டிக் ஓயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி

வரின்ராஜா சுலேஷ்

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த எரிபொருள் கொள்கலன் வண்டியொன்று மட்டக்களப்பு - திருகோணமலை வீதி முறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் வைத்துக் குறுக்கு வீதியிலிருந்து பிரதான வீதிக்கு வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்து மற்றுமொருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் புதன்கிழமை (05) 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.






சித்தாண்டி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய வீரக்கட்டி ரமேஸ் என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் கொள்கலன் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்திவெளி பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# கூட்டு சேர்வதால் இருப்பதும் இல்லாமல் போய் விடுமா?

மக்களால் நிராகரிக்கப்பட்டு ஆட்சியிழந்த கடந்த கால ஆட்சியாளர்கள் பலரும் மீண்டும் ஒன்றுகூடி ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதாக அறிந்து கொள்ள முடிகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இவ்வாறான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பிலான செய்திகள் வெளியாகியிருந்தன.

தாம் ஆட்சி செய்த காலப்பகுதியில் மக்களின் நலன்களுக்கு முக்கியத்துவமளித்து, தமது நலன்களைப் புறந்தள்ளிச் செயலாற்றியிருந்தால் அவர்களுக்குத் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கும் அதிகாரத்தை மக்கள் வழங்கியிருப்பார்கள். 2021, 2022 ஆம் ஆண்டுகளிலும், அதனைத் தொடர்ந்த காலப்பகுதியிலும் ஆட்சியிலிருந்தவர்கள் மக்களுக்கு ஏற்படுத்தியிருந்த பல அசௌகரியங்களை இன்னமும் மறந்திருக்கமாட்டார்கள்.

அத்தியாவசிய தேவைகளுக்கும் பொருட்களுக்கும் கூட வரிசைகளில் காத்திருப்பதும், அளவுக்கதிகமான தொகைகளைச் செலவிடுவதும் என பல கொடுமைகளை வாழ்நாளில் அனுபவித்திருந்தனர். அதன் பிரதிபலனைக் கடந்த தேர்தல்களில் அந்த ஆட்சியாளர்களுக்கு உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். 2015ஆம் ஆண்டிலும் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் ஆட்சியிலிருந்த நான்கு வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் மக்களால் உணரக்கூடிய நிவாரணங்கள் மேற்கொள்ளப்படவில்லை. வழங்கிய வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக ஒன்றுக்கு இரண்டு பிரதமர்கள் ஆட்சி செய்த நிலையும் ஏற்பட்டிருந்தது. அதன் தாக்கத்தையே நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதான பங்காளியாகத் திகழ்ந்த ஐக்கிய தேசிய கட்சி தற்போதும் அனுபவித்த வண்ணமுள்ளது.

தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்று இரண்டு முதல் நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், மீண்டும் பழைய பாணியில் எதிரணிகள் ஒன்று சேர்ந்து ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து, மக்களுக்கான திட்டங்களை மேற்கொள்ளவிடாமல், தம்மீது கவனத்தைத் திசை திருப்பி அதனூடாக மீண்டும் மக்கள் மத்தியில் சென்றுவிடலாம் என்ற ஒரு வியூகம் உள்ளது போலத் தோன்றுகிறது.

அதற்காகவே கடந்த தேர்தல்களில் ராஜபக்ஷர்களை முற்றாக நிராகரித்த நிலையில், தேசியப் பட்டியல் ஆசனத்தினூடாக பாராளுமன்றம் வந்துள்ள நாமல் ராஜபக்ஷ கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் மத்தியில் ஆதரவு திரட்டும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அறிய முடிகின்றது.

நாட்டின் நெருக்கடி நிலைக்குக் காரணமான கடந்த கால ஆட்சியாளர்களில் ராஜபக்ஷர்களும் முக்கிய இடம்பெற்றுள்ளனர் என்பதில் சந்தேகங்களில்லை, 2005ஆம் ஆண்டு முதல் அவர்களின் ஆட்சி சுமார் 15 ஆண்டுகள் வரை நாட்டில் தொடர்ந்துள்ளது. அவர்களின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தூரநோக்கிலான சிந்தனையற்ற, சில திட்டமிடப்படாத கடன் பெறுகைகள் மற்றும் முதலீடுகளின் காரணமாக நாடு கடன் நெருக்கடிக்கு முகங்கொடுத்தது என்றால் பிழையாகாது. உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றிலும் ராஜபக்ஷர்கள் அடங்கிய அவரின் சகாக்கள் நாட்டின் வங்குரோத்து நிலைக்குக் காரணமானவர்கள் என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறிருக்க, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் ஒன்றுகூடுகிறது, இருப்பதையும் இழந்துவிடச் செய்யும் ஒரு செயற்பாடாக அமையும் என்றே எண்ணத்தோன்றுகின்றது


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்



குடும்ப வன்முறைகள் பலவிதமான முறைகளில் நடந்தபடி இருப்பது பலருக்குத் தெரியாது. மௌனமாகவே இருந்தபடி, குடும்பத்தில் ஒருவரைப் பலரும் இணைந்து தூற்றுவதை இரகசியமாகச் செய்வதுண்டு.

மனைவி பயந்த சுபாவமானவளாக, அப்பாவியாக இருந்தால், அவர் வாழ வந்த குடும்பத்தில் கணவனது உறவுக்காரர்கள் மிரட்டிப் பயமுறுத்தியும் கிண்டலடித்தும் அவரது மனத்தைக் காயப்படுத்திவிடுவார்கள். எதிர்த்து பேசினால் பொல்லாதவள் என்பார்கள்.

எடுத்ததற்கெல்லாம் குறை சொல்வதுடன், தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டு, அந்தப் பரிதாபமான இல்லத்தரசியை கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவார்கள். குறைகளைச் சொல்லும்போது, தங்களுக்குள் மெல்லிய குரலில் இல்லாத பொய்களைச் சொல்வார்கள். ஆனால், வெளியுலகில் நடிப்பார்கள்.

சில வீடுகளில், மனைவியே கணவனைக் கௌரவமாக நடத்தாமல் இருப்பதுண்டு. எவர் மனதையும் சூட்சுமமான வழிமுறைகளில் துன்புறுத்துதல் அடாத செயலாகும். மௌன யுத்தம் குடும்பங்களில் நடக்கலாகாது.

நன்றி- பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை-06

# சுதந்திரத்துக்கு முந்தைய பொருளாதாரப் போக்குகள்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் கொலனித்துவ பொருளாதாரத்தின் பலம் மற்றும் பலவீனங்கள் ஆகிய இரண்டும் அதன் அடிப்படை கட்டமைப்பு மற்றும் இயக்கவியலில் இருந்து வளர்ந்தன. கட்டமைப்பில், பொருளாதாரம் இரட்டை ஏற்றுமதி பொருளாதாரம் என்று அழைக்கப்படக்கூடிய ஒரு மாதிரியைக் கொண்டிருந்தது. இந்த வகையான பொருளாதாரத்தில் இரண்டு அடையாளம் காணும் அம்சங்கள் உள்ளன. முதலாவது, வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தேசிய வருமானத்தை நெருக்கமாகச் சார்ந்திருத்தல். இரண்டாவது,பொருளாதாரத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தமை, ஒன்று நிறுவன அமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் நவீனமானது. இது உலகச் சந்தைக்கு உற்பத்தி செய்கிறது, மற்றொன்று இந்த இரண்டு விஷயங்களிலும் பாரம்பரியமானது, உடனடி கிராம சந்தைக்கு உற்பத்தி செய்கிறது. இலங்கையின் இந்த இருமைவாதமானது பல வேறுபட்ட சொற்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவம் மற்றும் வாழ்வாதாரம், பணமாக்கப்பட்டது மற்றும் பணமாக்கப்படாதது, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவைக்கானது. இவ்வாறு இரண்டு வேறுபட்ட தன்மைகளை உடையதாகப் பொருளாதாரம் அமைக்கப்பட்டிருந்தது. இதை ஆழமாக நோக்கின், இவ்விரண்டு துறைகளை அடையாளம் காண, 'நவீன மற்றும் பாரம்பரியம்' என்ற பொதுவான சொற்கள் மூலம் இதை அடையாளப்படுத்தவியலும். 'நவீன முறைகள்' என்பவை தோட்டங்கள், கொழும்பு மற்றும் சில சிறிய நகரங்களின் நிதி மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்தை உள்ளடக்கியதாக இருந்தன. 'பாரம்பரியத் துறையானது' கிராமங்களால் ஆனது மற்றும் பூர்வீக கைவினைப் பொருட்கள் மற்றும் பாரம்பரிய சேவைத் தொழில்கள் ஆகியவற்றுடன் விவசாயத்தை முதன்மையாகச் சார்ந்திருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே, பெருந்தோட்ட விவசாயத்துடன் நேரடியாகத் தொடர்பில்லாத தொழில்துறை மற்றும் நகர்ப்புற நடவடிக்கைகளை உள்ளடக்கிய குறிப்பிடத்தக்க 'மூன்றாம் துறை' வளர்ச்சியடையத் தொடங்கியது.

பொருளாதாரத்தின் இருமைத்துவம் சுதந்திரம் வரைச் செல்வாக்குச் செலுத்தியது. தோட்ட மற்றும் விவசாயப் பொருளாதாரங்கள் ஒப்பீட்டளவில் சில புள்ளிகளில் சந்தித்தன. சிறிய வாழ்வாதார தோட்டங்கள் மற்றும் பெரிய முதலாளித்துவ தோட்டங்கள் இரண்டையும் கொண்ட தேங்காய் தொழில் ஒரு கலவையான வடிவமாக இருந்தது. ஆனால், மற்ற ஏற்றுமதி தொழில்களான தேயிலை மற்றும் இறப்பர் ஆகியவற்றில், சிறிய உரிமையாளர்கள் ஒப்பீட்டளவில் முக்கியத்துவமற்றவர்களாக இருந்தனர். அவர்கள் 15 சதவீதத்திற்கும் குறைவான பயிரையே உற்பத்தி செய்தனர். மீதமுள்ள பொருளாதாரம் அதிகம் கணக்கிடப்படவில்லை. ஒரு சிறிய கிராஃபைட் சுரங்கத் தொழிலிருந்தது. பழைய வாசனைத்திரவிய வர்த்தகம் முக்கியமற்றதாக இருந்தது. போர்த்துகீச மற்றும் டச்சுக் கொலனித்துவ காலங்களின் முக்கிய வணிக நடவடிக்கையாக இருந்த வாசனைத் திரவியங்கள் மீது அக்கறை காட்டப்படவில்லை. இவை குடிசைத் தொழில்களாக மாபெரும் ஏற்றுமதிப் பெறுமதியைக் கொண்டிருந்தன. ஆனால், அதற்கான நடவடிக்கைகள் எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை. தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் ஏற்றுமதி தந்த இலாபம், பிற வாய்ப்பான துறைகள் மீதான அக்கறைக்கு அனுமதிக்கவில்லை. உள்நாட்டு அதிகார வர்க்கத்திற்கும் பெருந்தோட்டத் தொழிற்றுறையில் பங்கிருந்ததால் பிற துறைகள் புறக்கணிக்கப்பட்டன. இதனால் எளிமையான உற்பத்திப் பொருட்களுக்குக் கூட, இறக்குமதியை நம்பியிருப்பது ஏறக்குறைய முழுமையாக இருந்தது.

1920கள் மற்றும் 1930களில் சிங்கள தொழில்முனைவோரால் முன்னெடுக்கப்பட்ட தென்னைத் தொழில்துறையின் வளர்ச்சி முக்கியமாக இருபதாம் நூற்றாண்டின் நிகழ்வாகும். தோட்டங்களுக்கு அருகாமையில் உள்ள பகுதிகளைப் பெரிய நகரங்களுக்கு நவீன போக்குவரத்துக்குத் திறந்து விடுவதும் ஒருங்கிணைக்கும் விளைவை ஏற்படுத்தியது. இரண்டாம் உலகப் போரின் போது கொழும்பைச் சூழவுள்ள முழு ஈர வலய தாழ் நிலப் பகுதியும் முற்றிலும் வணிகமயமாகி விட்டது. வாழ்வாதார உற்பத்தி அனைத்தும் மறைந்துவிட்டன, மேலும் அப்பகுதியில் வசிப்பவர்களில் பலர் பாரம்பரிய, தோட்ட மற்றும் நகர்ப்புற நடவடிக்கைகளுக்கு இடையே சுதந்திரமாக இடம்பெயர்ந்தனர். இதற்கு நேர்மாறாக, தீவின் பல பகுதிகள் 1939இல் முடிவடைந்த பொருளாதார வளர்ச்சியின் நூற்றாண்டில் கிட்டத்தட்டத் தீண்டப்படாமல் விடப்பட்டன.

இலங்கையின் தொழிலாளர் படை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோட்ட அமைப்பு உறுதியாக நிறுவப்பட்டவுடன்,நவீன மற்றும் பாரம்பரிய துறைகளுக்கு இடையே சுமார் 40-60 என்ற அடிப்படையில் பிரிந்தது. இந்த விகிதம் இரண்டாம் உலகப் போர் வரை குறிப்பிடத்தக்க வகையில் நிலையானதாக இருந்தது. கிடைக்கும் தொழிலாளர் சக்தியில் 30 சதவீதம் தோட்டங்களிலும், மற்றொரு 30 முதல் 35 சதவீதம் பாரம்பரிய விவசாயத்திலும், மீதமுள்ள 35 முதல் 40 சதவீதம் விவசாயம் அல்லாத பணிகளிலும் பயன்படுத்தப்பட்டது. விவசாயத்திற்கு வெளியே பணிபுரியும் 40 சதவீதத்தினரில் சிலர் நவீன துறையிலும் சிலர் பாரம்பரிய துறையிலும் பணியாற்றினர். இக்காலத்துத் தகவல்களின் அடிப்படையில் தெளிவான துல்லியமான பிரிவியைச் செய்ய முடியாது போனாலும்,நான்கில் மூன்று பங்கினர் பாரம்பரியத் துறையுடன் இணைக்கப்பட்டதாகவே இருந்தனர் என்று கருதப்பட வேண்டும். இதில் பெரும்பான்மையானோர், பெரும்பாலும் சேவைத் தொழில்களிலேயே பங்களித்தனர்.

1920களின் பிற்பகுதி வரை நவீன துறையின் பங்களிப்பு கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதில் சந்தேகமில்லை. தேசிய வருமானம் மற்றும் வெளிநாட்டு வர்த்தக புள்ளிவிவரங்களின் அண்ணளவான மதிப்பீடுகளைப் பார்க்கும்போது,பெரும்பாலும் நவீன துறையின் உற்பத்தியாக இருந்த ஏற்றுமதிகள் தேசிய வருமானத்தில் 35 முதல் 40 சதவீதம் வரை இருப்பதைக் காணலாம். அரசாங்கத்தின் பங்களிப்பையும், உளர் பயன்பாட்டிற்காக நவீன துறையால் உற்பத்தி செய்யப்படும் சில பொருட்கள் மற்றும் சேவைகளையும் சேர்த்தால், மொத்த தேசிய வருமானத்தில் பாதியளவு நவீன துறையில் வேலை செய்யும் 40 சதவீத தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

இரண்டாம் உலகப் போர் வரையிலான இலங்கையின் பொருளாதாரம், ஒரு நவீன மற்றும் பாரம்பரிய துறையை உள்ளடக்கியதாக இருந்தது. இவை இரண்டும் ஒருவருக்கொருவர் மற்றும் வெளி உலகத்துடன் வர்த்தகம் செய்யத் திறந்திருந்தது. இருப்பினும், பெருமளவிலான வர்த்தக ஓட்டங்கள் நவீன துறையிலிருந்து வெளியிலும் மீண்டும் மீண்டும் இயங்கின. சில பொருட்கள் மற்றும் சேவைகள் பாரம்பரிய துறைக்கும் நவீன துறைக்கும் இடையில் அல்லது பாரம்பரிய துறைக்கும் வெளிக்கும் இடையே பாய்ந்தன. அரசு, துறைகளுக்கிடையேயான இந்த ஓட்டங்களின் வடிவத்தை மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்ட ஒரு நிறுவனமானது, அந்த நேரத்தில் சிறியதாக இருந்தது மற்றும் இந்த அடிப்படை முறையை மாற்றுவதற்கு அது எதனையும் செய்யவில்லை.

1929 இல் இலங்கையின் சனத்தொகையில் சுமார் 60 வீதம் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பாரம்பரியத் துறையை வாழ்வாதாரத்திற்காக நம்பியிருந்த போதிலும், நாட்டின் அனைத்து வெளிநாட்டு வர்த்தகமும் நவீன துறையினாலேயே நடத்தப்பட்டது. 1929 இல் நாட்டின் நான்கில் மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதிகள் நவீனத் துறையில் அவற்றின் தோற்றத்தைக் கொண்டிருந்தன. மேலும்,ஏறக்குறைய அனைத்து ஏற்றுமதிகளும் குறைந்த பட்சம் நவீனத் துறை ஏற்றுமதி-இறக்குமதி நிறுவனங்களின் கைகளுக்குச் சென்றன.

1929இல் மேற்கத்தியப் பாணி நுகர்வு பொருட்கள் இந்த நேரத்தில் மொத்த இறக்குமதியில் 16.8 சதவீதமாக இருந்தது. அக்காலப்பகுதியில் இலங்கையிலிருந்த ஐரோப்பிய சனத்தொகை 7,000 தொடக்கம் 8,000க்கு இடைப்பட்டதாக இருந்தது. அவர்கள் மொத்த சனத்தொகையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகப் பகுதியினரே. இந்த எண்ணிக்கை இலங்கையில் உள்ள சில ஐரோப்பியர்கள் அனுபவித்த மிக உயர்ந்த வருமான நிலைகள் மற்றும் பரவல் (பின்னர் இது மிகவும் பரந்ததாக மாறியது) இலங்கை மக்களின் மேற்கத்திய வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றன. மேற்கத்திய வகைப் பொருட்களின் இலங்கை நுகர்வோர்கள் கிட்டத்தட்ட 10,000 அல்லது 20,000 பேர் ஆக இருக்கலாம் என்று கணக்கிடப்படுகிறது. அவர்கள் பெரும்பாலும் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தோட்டங்கள், வர்த்தகம் மற்றும் அரசாங்கத்தில் உயர்மட்ட பதவிகளைக் கொண்டவர்கள், அத்துடன் சிறிய ஆனால் வளர்ந்து வரும் சுதந்திரமான இலங்கை நடுத்தர மற்றும் உயர் வர்க்கம், நில உரிமையாளர்கள் மற்றும் சட்டம், மருத்துவம், தொழில் வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது.

1929இல் இறக்குமதி செய்யப்பட்டவற்றில் பாதிக்கு மேல் பாரம்பரிய நுகர்வுப் பொருள்களாக இருந்தது. பெரும்பாலும் பிரதான உணவுகள் (குறிப்பாக அரிசி), பருத்தி ஜவுளிகள், மண்ணெண்ணெய் மற்றும் தீப்பெட்டிகள் போன்ற அடிப்படை உற்பத்திப் பொருட்களைக் கொண்டிருந்தது. இங்கு இரண்டு முக்கிய போக்குகள் தோற்றம் பெறுவதை அவதானிக்கலாம். முதலாவது, ஒரு குறிப்பிட்ட உள்நாட்டு வர்க்கத்தின் தேவைகளுக்காக அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமை. அதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணி பயனற்ற முறையில் செலவானது. இரண்டாவது, நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய நுகர்வுப் பொருட்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன.

## கடிதங்கள்

### சுகாதாரக் கேடாக உள்ள பேருந்து நிலையம்



பதுளை உள்ள மத்திய பேருந்து நிலையத்திற்குத் தினமும் பாடசாலை மாணவர்கள் உட்பட முப்பதாயிரத்துக்கும் அதிகமான பயணிகள் வருகை தருகின்ற நிலையில், குறித்த பேருந்து நிலையம் மிக அழுக்காகவும், சுகாதாரக் கேடாகவும் இருப்பதாகப் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வெற்றிலை சாப்பிடுபவர்கள் எச்சில் துப்புவது, சுண்ணாம்புச் சாற்றைச் சுவர்களில் பூசுவது, சுவரொட்டிகள் ஒட்டுவது போன்ற தவறான செயல்களால் பேருந்து நிலையம் சீரழிந்த நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், கடதாசிகள், பொலித்தீன்கள், பிளாஸ்டிக் போத்தல்கள் போன்ற குப்பைகளால் நிறைந்துள்ளதுடன் தெரு நாய்கள் இரவும் பகலும் பேருந்து நிறுத்தத்தில் நடமாடிக்கொண்டு இருப்பதனாலும் பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பதுளை மாநகர சபையிடம் கேட்டபோது, இது குறித்து ஏற்கனவே நடவடிக்கை எடுத்த போதும் இதுவரை நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் இந்த பேருந்து நிறுத்தத்தைச் சுத்தம் செய்யுமாறு பயணிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பாலித்த ஆரியவன்ச



# சங்ககால இலக்கியங்களில் தொல்லியல் ஆய்வுகளும் அறிவியல் வெளிப்பாடுகளும்

ல.மயூரன் BA,MA,
திருக்கடலூர்,
திருகோணமலை.



(நேற்றைய தொடர்ச்சி ....)

அவர்களின் சிந்தனையில் வானில் உள்ள நட்சத்திரங்களின் தோற்றங்களும், அவற்றின் அசைவுகளும் புவியில் உள்ள உயிரினங்களின் செயற்பாடுகளில் செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களது நம்பிக்கை பழையனவற்றை அடியொற்றிக் காணப்பட்டாலும், அவர்கள் கூறும் நட்சத்திர தோற்ற காலங்கள் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கத் தக்கவை. சங்கப் புலவன் கூறும் மாதங்களும் அக்காலப்பகுதியில் தோற்றம் பெறும் நட்சத்திரங்களின் வடிவங்களும் இன்றும் இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றன. குறிப்பாக இந்தியத் தீபகற்ப பகுதியில் தென்பகுதி சார்ந்த நிலப்பகுதியில் வாழும் மக்களால் இதனை வெற்றுக் கண்களால் நோக்க முடியும்.

“கழிந்தது பொழிந்து என வான் கண்மாறிலும் கொல்லது விளைந்து என நிலம் வளம் கரம்பிலும் எல்லா உயிர்க்கும் இல்லாமல் வாழ்க்கை...” ( புறநானூறு 203) எனும் பாடலில் பசுங்குடையார் பின்வருமாறு கூறுகிறார்.

ஏற்கெனவே பொழிந்து கழிந்து விட்டோமே என்று வானம் பெய்யாது போனாலும். ஏற்கெனவே விளைந்து விட்டோமே என்று நிலம் தன் வளத்தை ஒளிந்து கொண்டாலும், எல்லா உயிர்க்கும் வாழ்க்கை இல்லாமல் போய்விடும் இவ்வாறு புலவன் கூறும் பொழுது புவியின் அடிப்படை கட்டமைப்பு கற்கோளம் பற்றியும், நீர்க்கோளம் பற்றியும், உயிர்க்கோளம் பற்றியும் பேசப்படுகின்றது. ஆகாயத்திலிருந்து பெய்யும் மழையூடாகவும் வளிக்கோளம் பற்றிக் கூறப்படுகின்றது. இதனைக் கூறுவதற்கு “அவ் வான் கண்மாறிலும்...” எனும் பாடல் வரிகள் காணப்படுகின்றது. உயிர்க்கோள இயக்கம் இம்மூன்று மண்டலங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கிக் கொண்டு உள்ளது. இவ்விடயத்தை உறுதிப்படுத்தும் வகையில் சங்கப்புலவன் “எல்லா உயிர்க்கும் இல்லாமல் வாழ்க்கை...” என்னும் அடிகளில் கூறுகிறார். உயிர்க்கோளம் எனும் விடயம் பற்றிப் பேசப்படும் பொழுது வளி, நீர், நிலம் பற்றிப் பேசப்படும் இவைகள் இணைந்த வண்ணமே உயிர்க்கோளம் பற்றிப் பேச முடியும் இதனையே ஆய்ந்து அறிந்த சங்கப் புலவர்களும் தமது பாடலில் உயிர்கோளத்தின் இருப்பிற்கான காரணத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

“விரிகதிர் மதிமொடு வியல் விசும்பு புணர்ப்ப எரி, சடை, எழில் வேழம், தலையெனக் கீழ் இருந்து...” (பரிபாடல்11) எனும் பாடல்களில் நிலவு, ஆகாயம் முழுவதும் வியாபித்துள்ள நாள் என கூறப்படுகின்றது. இதனைப் பௌர்ணமி தினம் (FullMoon) என்பர். இத்தினத்தில் கார்த்திகை நட்சத்திரம் அந்த நட்சத்திரம் அந்த நட்சத்திரத்தின் கூட்டங்கள் இடப வீதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, சிவனைப் பதியாகக் கொண்ட நட்சத்திரமான திருவாதிரை தன்னுள்ளே கொண்டுள்ளது. மிதுன வீதி யானைக்கு எரிய நாளான பரணியை தன்னுள்ளே கொண்ட மேட வீதி ஆகிய மூன்று வீதிகளைக் கொண்டுள்ளது. இன்றைய வானியல் ஆய்வாளர்கள் கூறும் நட்சத்திர அடுக்குகள் பற்றி அன்றே தெளிவாகக் கூறியுள்ளனர் யாழில் வாசிக்கும் பழந்தமிழ் புலவர்கள்.

தமிழர் மரபில் நவக்கிரகம் எனப்படும் கோள் மண்டலத்தில் ஒன்பது கோள்கள் உள்ளன அவை மூன்று நட்சத்திரங்கள் என 27 நட்சத்திரங்கள் உள்ளன இவற்றை அடிப்படையாகக் கொண்டு 12 ராசிகள் பிரிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில்,
12 மாதங்கள் கணிக்கப்படுகின்றன. தமிழர் மாதங்களின் சித்திரையில் தொடக்கம் பெற்று பங்குனியில் நிறைவடைகின்றது. இதனைப் பாரம்பரியமாகக் கொண்டு இருந்தாலும் இதனுடன் தொடர்பு பட்ட வகையில் சூரியனின் உச்சம் கொடுத்தல் நிகழ்வுக்கும் சம்பந்தம் உண்டு. சூரியன் மத்திய கோட்டிற்கு உச்சம் கொடுப்பதும் அதனை

> சங்க இலக்கியங்கள் வாழ்வியல் பொருளான காதலையும் வீரத்தையும் கூறி செல்வதோடு நின்றுவிடாது புவியின் பௌதீக தன்மைகளையும் அதனோடு இணைந்த இயற்கை செயற்பாட்டையும் கூறிச் செல்கிறது

தொடர்ந்து வட அகலாங்கு நோக்கிப் பயணிப்பதும் என வருடப்பிறப்புக்கான சூரிய நகர்வு இடம்பெறுகின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு வருடங்களுக்கான மாதங்களும் கணிக்கப்படுகின்றன.

அண்டத்தில் உள்ள நட்சத்திர மண்டலங்கள் மூன்று வீதிகளில் உள்ளன. அவை தலா ஒன்பது நட்சத்திரங்கள் வீதம் இருந்து ஏழு நட்சத்திரங்கள் வீதம் இருப்பத்து ஏழு நட்சத்திரங்கள் பன்னிரண்டு ராசி மண்டலங்களையும் கொண்ட வானில் தனக்குரிய இடப ராசியை அடைய மேடம் மேஷ ராசியைச் செவ்வாய் அடையப் புதன் மிதுன ராசியில் நிற்க சூரியன் தன்னுடைய ராசியான சிம்மத்துடன் மேலுள்ள கடகத்தில் இருக்கச் சனியின் துணை இல்லங்களான மகரம் கும்பத்தின் அப்பால் உள்ள மீனத்தை அடைய யமனைப் போன்ற சனி மகரத்தில் இருக்க பாம்புக் கிரகங்களில் ஒன்றான ராகு நிலவை மறைக்க(சந்திரகிரகணம்) அப்படிப்பட்ட நாளில் அகத்தியனுக்கு உரிய நட்சத்திரம் (Canopus) மிதுன ராசியை அடைந்தது அன்று வேனில் காலம் தந்த வெம்மை அகல சைய மலையில் பருவ மழை பொழிய ஆரம்பித்தது. அந்த மழையின் காரணமாகப் புவியில் புதுப்புனல் வந்தது. இப்பாடலில் பல அறிவியல் கருத்துக்கள் கொட்டிக்கிடக்கின்றன. நட்சத்திரங்களின் பயணப்பாதைகளும். அவற்றின் செயற்பாடுகளும் அதனோடு இணைந்த வகையில் புவியில் இடம்பெறுகின்ற பருவ நிலைகளும் கூறப்படுகின்றது. இவ்வாறு காலங்களின் வருகையும் அவற்றின் மாற்றங்களையும் நட்சத்திரங்கள் கொண்டு அறியும் ஆற்றல் கொண்ட மக்கள் சங்க காலத்தில் காணப்பட்டுள்ளனர். அதனால் அக்கால புலவனும் அதனைத் தனது பாடல் ஊடாக வெளிப்படுத்தி நிற்கின்றான்.

மழை பொழியும் போது, வானில் இயற்கையினால் வடிகட்டப்பட்டு அனுப்பப்படும் நீர் தூய்மையானது அதனால்தான் புலவன் புதுப்புனல் என கூறுகின்றார். இவ்வாறான இயற்கை நிகழ்வான மழை பற்றி கூறும் சங்கப் புலவர்கள் அதன் சிறப்புகளையும் பற்றிக் கூற தவறவில்லை பதினெண் இலக்கிய வகைப்பாட்டில் முல்லைப்பாட்டு எனும் பாடல் தொகுப்பில் இதனை அறியலாம். முல்லை நிலத்து மக்களின் வாழ்க்கை முறையில் மழை என்பது இரண்டறக் கலந்துள்ளது என்பதை அறிய முடியும். மழை எனும் இயற்கை நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு காலமும் அதற்கிணங்க அவர்களின் காதலும் வீரமும் வெளிப்பட்டு நிற்கின்றது இதனைப் பின்வரும் பாடலடிகள் வெளிப்படுத்தியுள்ளன.

“மாரியுமுண்டு ஈங்கு உலகு புரப்பதுவே...” (புறத்திணை 107)

மழையின் செயற்பாட்டைக் கூறும் அக்காலப் புலவர்கள் அதன் உருவாக்க முறையையும் அதன் இயல்பையும் கூறி செல்கின்றனர். மழையின் சிறப்புகளைக் கூறும் சந்தர்ப்பங்கள் சங்க இலக்கியங்களில் வியாபித்துக் காணப்பட்ட போதும் அவற்றில் சிலவற்றை நோக்கலாம். நற்றிணை பாடல் பகுதியில் 289ம் பாடலில்

“அம்ம வாழி தோழி காதலர்.....
வானம் நளி கடல் முகத்து செறிதக இருளி,
கனை பெயல் பொழிந்து, கடுங் குரல் பயிற்றி
கார் செய்து......” (நற்றிணை 289)

இப்பாடலில் மேகமானது நெருங்கிய கடல் நீரை முகர்ந்து செறிவு பொருந்த இருண்டு மிக்க மழையைப் பெய்து கடியக் குரலைக் காட்டி...என பாடலின் பொருள் செல்கிறது. மேகங்கள் கடல் நீரை நெருங்கி கடல் நீரை உறிஞ்சிக் கொள்கின்றது என புலவன் கூறுகின்றான். இதுவே மழை உருவாகுவதற்கான முதல் செயல்பாடாகும். அதாவது மேற்பரப்பு நீர் ஆவியாதல் என்பதைக் குறிக்கின்றது எனலாம். இவ் நீர் ஆவியாகி கார் மேகங்களை உருவாக்கி இடி மின்னலைத் தருகின்றது. இந்நிகழ்வை அன்றைய புலவர்கள் கூறியமை தமிழின சமூகத்தின் வானியல் அறிவாற்றலை கூறுகின்றது. அதுபோன்று, காற்றில் மிதந்து செல்லும் கார்மேகம் மலை உச்சிகளில் பட்டு மலையின் காற்றுப் பக்கம் மழையையும் காற்று ஒதுக்குப் பக்கம் வறட்சியையும் ஏற்படுத்தும் இதனால் காற்றுப் பக்கம் தாவரங்களின் செழிப்புத்தன்மை சிறப்பாகக் காணப்படும் இதனை நற்றிணைப் பாடலின் சில வரிகள் எடுத்துச் சொல்கின்றன.

“கொண்டல் மா மழை குடக்கு ஏர்பு குழைத்த சிறு கோல் இணர பெருந் தண் சாந்தம் ....” (நற்றிணை 140 )

இவ்வாறு இயற்கையுடன் வாழ்ந்த சங்கப் புலவன் இயற்கையின் நிகழ்வுகளையும் உன்னிப்பாக அவதானித்து அதனை உணர்த்தும் வகையில் தமது பாடல்களில் வெளிப்படுத்தியும் உள்ளான் இக்கருத்துக்களை மேலும் வலு சேர்க்கும் வகையில் பதித்துப்பற்று 12ம் பாடலின் வரிகள் காணப்படுகின்றது.

“வளிபொரு மின்னொடு வானிருள் பரப்பி
விளிவுடன்று கிளையொடு மேல்மலை முற்றி தளிபொழி சாரல் ததர்மலர் தாஅய்...” (பதித்துப்பற்று 12)

பரிபாடல் 12ம் பாடலில் நல்வழுதியார் எனும் புலவர் காற்றும் மின்னலுமாக வானம் கருத்து மேல் மலையில் மழை பெய்யத் தொடங்கியது என மழை பெய்ய ஆரம்பிக்கும் ஆரம்ப நிகழ்வைக் கூறிக்கொண்டு தான் கூறவந்த பொருளை நோக்கியவாறு பாடல் அடிகளை நகர்த்திச் செல்கின்றார்.

இவ்வாறு சங்க இலக்கியங்கள் வாழ்வியல் பொருளான காதலையும் வீரத்தையும் கூறி செல்வதோடு நின்றுவிடாது புவியின் பௌதீக தன்மைகளையும் அதனோடு இணைந்த இயற்கை செயற்பாட்டையும் கூறிச் செல்கிறது. இப் பாடலில் இயற்கையின் நிகழ்வுகள் சாதாரணமாகக் கூறப்பட்டு இருந்தாலும், அவை தமிழரின் அறிவாற்றலை வெளிப்படுத்தும் ஆதாரங்களாகவே காணப்படுகின்றது. இன்றைய தமிழ் தலைமுறையினரின் அறிவாற்றலுடன் நோக்கும் போது பழமையான தமிழரின் அறிவாற்றலுக்கு அவை ஒப்பாகுமா என்பது நாம் ஒவ்வொருவரும் நமக்குள் கேட்க வேண்டிய கேள்விகளாக உள்ளன. எனவே நமது முன்னோர்கள் பாடிச்சென்ற பாடல்கள் இலக்கியப்படைப்புகளில் மட்டுமல்ல அவை அறிவின் வெளிப்பாடுகளாகவும் காணப்படுகின்றது. (முற்றும்...)

# Intrepid இலங்கையில் சர்வதேச மாநாடு 2025ஐ முன்னெடுக்கத் திட்டம்



Intrepid Travel, தனது வருடாந்த சர்வதேச அமர்வு 2025ஐ முன்னெடுப்பதற்காக இலங்கையின் கொழும்பை தெரிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. அதன் தலைமையகம் அமைந்துள்ள அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகருக்கு வெளியே இந்த நிகழ்வை முன்னெடுக்கும் இரண்டாவது சந்தர்ப்பமாக இது அமைந்திருப்பதுடன், Intrepid இன் சர்வதேச செயற்பாடுகளில் இலங்கை ஆற்றும் முக்கிய பங்கு இதனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டில் கொழும்பில் அலுவலகத்தை நிறுவிய Intrepid, படிப்படியாக வளர்ச்சி கண்டுள்ளது. நாடு முழுவதிலும் பயணங்களை நிர்வகிக்கும் திறன் கொண்ட இலங்கையின் அலுவலகம், நிறுவனத்தின் செயற்பாடுகளின் முக்கியமான அங்கமாக திகழ்கின்றது. இந்த அலுவலகத்தினூடாக தொழினுட்பம், வருமான நிர்வாகம், மனித வளங்கள், தயாரிப்பு சேவைகள், நிதியியல் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் போன்றவற்றுக்கான ஆதரவு வழங்கப்படுகின்றது. Intrepid இன் உள்நாட்டு அணியில் 276 அலுவலகசார் ஊழியர்கள் மற்றும் 45 உள்நாட்டு சுற்றுலா தலைமை செயற்பாட்டாளர்கள் போன்றவற்றை கொண்டுள்ள நிலையில், இலங்கையின் அலுவலகத்தின் உறுதியான செயற்பாட்டின் காரணமாக, இந்த பெருமைக்குரிய நிகழ்வை முன்னெடுப்பதற்கான இயற்கையான தெரிவாக கொழும்பு அமைந்துள்ளது.

2025 பெப்ரவரி 24 முதல் 27 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ள Intrepid இன் சர்வதேச மாநாட்டினூடாக, அதன் 40 க்கும் அதிகமான அலுவலகங்களைச் சேர்ந்த 50 க்கு மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த 200 க்கும் அதிகமான சர்வதேச பங்குபற்றுனர்கள் ஒன்றிணைக்கப்படுவர். அதில் Intrepid இன் பணிப்பாளர் சபை, இணை ஸ்தாபகர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ அணியினர் போன்றவர்களுடன் 300 உள்நாட்டு அணி அங்கத்தவர்களும் அடங்கியிருப்பர்.

நான்கு நாள் மாநாட்டில் மூலோபாய கலந்துரையாடல்கள், தலைமைத்துவ பயிற்சிப் பட்டறைகள், உள்ளூர் சமூக ஈடுபாடுகள் மற்றும் உலகளாவிய ரீதியில் தமது ஊழியர்களுக்கான அனுபவ பயணங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும். உறுதியான, உள்ளடக்கமான நிறுவன கலாசாரத்தை ஊக்குவிக்கும் Intrepid இன் பரந்த நோக்குடன் இந்தத் திட்டம் பொருந்துவதாக அமைந்திருப்பதுடன், வியாபார செயற்பாடுகளை சீரமைப்பதில் அணி அங்கத்தவர்கள் வகிக்கும் பணியை மேம்படுத்துவதில் இது முக்கிய பங்காற்றும். இலங்கையில் பிரதான பங்காளர்களை ஒன்றிணைப்பதன் மூலமாக, சர்வதேச அணிகளை வலிமைப்படுத்துவதில் காண்பிக்கும் உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் ஆசியாவில் நிறுவனத்தின் பிரசன்னத்தை மீளுறுதி செய்வது போன்றவற்றுக்கான சமிக்ஞை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

Intrepid Travel இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் தோர்ன்டன் குறிப்பிடுகையில், “எமது நிறுவனத்தின் முக்கியமான அங்கமாக இலங்கையிலுள்ள எமது அணியினர் திகழ்வதுடன், இந்த சாகச அம்சங்கள் நிறைந்த நாட்டுக்கு விஜயம் செய்வதற்கு எமது வாடிக்கையாளர்களும் அதிகம் ஆர்வத்தைக் கொண்டுள்ளனர். இலங்கைக்கான எமது நோக்கம் என்பது சுற்றுலாத்துறைக்கு அப்பாற்பட்டதாக அமைந்துள்ளது. நிலைபேறான வளர்ச்சியை முன்னெடுப்பது மற்றும் அர்த்தமுள்ள, நீடித்து நிலைத்திருக்கும் தாக்கத்தை ஏற்படுத்துவது அவற்றில் அடங்குகின்றன. பெருமளவான Intrepid பிரயாணிகள் இலங்கையை தெரிவு செய்வதனூடாக, இலங்கையில் சுற்றுலாவுக்கு காணப்படும் பெருமளவு வாய்ப்பு புலப்படுவதுடன், இந்த வெற்றிகரமான செயற்பாட்டின் பலன்களை உள்ளூர் சமூகத்தாரும் பெறுவதை உறுதி செய்வதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். இலங்கையின் கலாசாரத்தை பகிர்ந்து கொள்வதையிட்டு நாம் பெருமை கொள்வதுடன், உள்நாட்டு வியாபாரங்களுக்கும் சமூகங்களுக்கும் ஆதரவளிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்” என்றார்.

2024 இல், Intrepid சிறந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், இலங்கைக்கு 4,000க்கு அதிகமான பிரயாணிகளை வரவேற்றிருந்தது. இது 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 206% அதிகரிப்பாகும். கொவிட்-19 தொற்றுப் பரவலுக்கு முன்னரான எண்ணிக்கையை விட இது மிகவும் உயர்வானதாகும். 2030ஆம் ஆண்டளவில் 15,000க்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கான திட்டங்களை நிறுவனம் கொண்டுள்ளது. அதனூடாக இலங்கையின் சுற்றுலாவுக்கு பெருமளவு பங்களிப்பு வழங்கவும், பொருளாதார அனுகூலங்களை உள்ளூர் சமூகங்கள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் சிறு வியாபாரங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் எதிர்பார்க்கின்றது.

Intrepid இன் இலங்கைக்கான பொது முகாமையாளர் பூர்ணக தெல்பசித்ர குறிப்பிடுகையில், “எமது சர்வதேச தலைமைத்துவ மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் சக ஊழியர்களை கொழும்புக்கு வரவேற்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கை ஒரு சுற்றுலாத் தலமாக வழங்கும் சேவைகளை வெளிப்படுத்தவும், எமது கலாசாரத்தை பகிர்ந்து கொள்ளவும் மற்றும் எமது நிறுவனத்தின் மாபெரும் முக்கியமான நிகழ்வை எனது சொந்த நாட்டில் முன்னெடுப்பதும் ஒரு சிறந்த வாய்ப்பாகும்” என்றார்.

# புளோரா டிஷூக்களுக்கு ‘Best Hygienic Disposables Brand of the Year 2024’ விருது



புளோரா டிஷூக்கள் வர்த்தக நாம தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் Pee Bee Management Services (Pvt) Limited, அண்மையில் நடைபெற்ற People’s Pinnacle Sri Lanka விருதுகள் வழங்கும் நிகழ்வில் ‘Best Hygienic Disposables Brand of the Year 2024’ எனும் விருதை தனதாக்கியிருந்தது.

தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை MUGP இன்டர்நஷனல் ஏற்பாடு செய்திருந்ததுடன், இந்நிகழ்வு அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. பல்வேறு துறைகளில் நிறுவனங்கள் பதிவு செய்திருந்த சாதனைகளை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்ததுடன், குறித்த நிறுவனங்களின் பெருமளவு வளர்ச்சி மற்றும் சந்தை தலைமைத்துவம் ஆகியவற்றை கொண்டாடியிருந்தது.

படிப்படியாக இலங்கையின் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் சந்தையில் சந்தை முன்னோடி நிலைக்கு உயர்ந்த புளோரா டிஷூக்கள், தூய்மை பேணலுக்காக பயன்படுத்தும் மென்மையான டிஷூ கடதாசி தயாரிப்புகள் பிரிவில் SLSI சான்றிதழை பெற்ற ஒரே வர்த்தக நாமம் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் முகாமைத்துவ பணிப்பாளர் கிஷோர் சுர்தானி கருத்துத் தெரிவிக்கையில்,
“40 வருடங்களுக்கு மேலாக வர்த்தக நாமத்துடன் இணைந்திருக்கும் பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு புளோரா டிஷூக்கள் நன்றி தெரிவிக்கின்றது. எமது வாடிக்கையாளர்களின் ஆதரவு மற்றும் எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பு போன்றன இல்லாமல் எம்மால் இந்த மைல்கல்லை எய்தியிருக்க முடியாது. அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம்” என்றார்.

நிலைபேறான செயற்பாடுகளில் புளோரா டிஷூக்கள் தொடர்ந்தும் தன்னை ஈடுபடுத்துவதுடன், தனது சூழலுக்கு நட்பான தயாரிப்பு தெரிவுகளை விரிவாக்கம் செய்வது, பிளாஸ்ரிக் பொதியிடலை குறைப்பது மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவது போன்றன இதில் அடங்கியுள்ளன. தமது தயாரிப்புகளில் பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் pure virgin pulp இலிருந்து bamboo pulp க்கு மாறுவது தொடர்பிலும் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது.

மென்மையாக டிஷூக்கள் மற்றும் தூய்மை தயாரிப்பு பிரிவில் தனது தயாரிப்புகளை தொடர்ந்தும் உள்நாட்டு சந்தைகளில் விரிவாக்கம் செய்வதுடன், சார்க் பிராந்தியத்தில் நிறுவனத்தின் மூலோபாய விரிவாக்க திட்டங்களின் பிரகாரம் மாலைதீவுகள் போன்ற வெளிநாட்டு சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றது. இதுவரை சென்றடையாத பிரிவுகளை சென்றடையும் வகையில் e-வணிக கட்டமைப்புகள் அடங்கலாக டிஜிட்டல் மயமாக்க செயற்பாடுகளில் பெருமளவு முதலீடுகளை மேற்கொள்வதுடன், சந்தை மாற்றங்களுக்கு துரிதமாக பதிலளிப்பதாகவும் அமைந்துள்ளது.

பங்களாதேஷ்

## மீண்டும் வெடித்தது வன்முறை

பங்களாதேஷில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தந்தையின் நினைவு இல்லம் வன்முறையாளர்களால் தீ வைக்கப்பட்டது.



பங்களாதேஷில், கடந்த ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதியன்று எழுந்த மாணவர்கள் போராட்டத்தில், மிகப்பெரிய வன்முறை வெடித்ததன் எதிரொலியாக, பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

இதனைத் தொடர்ந்து பங்களாதேஷில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, இராணுவத்தின் கண்காணிப்பில் அங்கு இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் பொறுப்பேற்றார்.

பங்களாதேஷில் பொதுத்தேர்தல் இந்த ஆண்டின் இறுதியிலோ அல்லது 2026ஆம் ஆண்டின் தொடக்கத்திலோ நடைபெறலாம் என்ற சூழல் உள்ளது. பங்களாதேஷில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிட, ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி அனுமதிக்கப்பட மாட்டாது என்று இடைக்கால அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்நிலையில், அவாமி லீக்கின் தற்போது கலைக்கப்பட்ட மாணவர் பிரிவான சத்ரா லீக், ஷேக் ஹசீனா இணையவழி வாயிலாக உரை நிகழ்த்த ஏற்பாடு செய்திருந்தது. அதன்படி நேற்று (5) இரவு ஷேக் ஹசீனா உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டது. தற்போதைய ஆட்சிக்கு எதிராக ஒரு எதிர்ப்பை பதிவு செய்ய நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுப்பதாக தகவல் பரவியது.

முன்னாள் பிரதமர் பிரதமர் ஷேக் ஹசீனா நேரலையாக இணையத்தில் உரையாற்ற இருப்பதாகத் தகவல் பரவிய நிலையில், போராட்டக்காரர்கள் குழுவினர், டாக்காவில் உள்ள முஜிபுர் ரகுமான் நினைவு இல்லத்தைச் சேதப்படுத்தி தீ வைத்தனர். பல போராட்டக்காரர்கள் வீட்டின் இரண்டாவது மாடியில் ஏறி, கடப்பாரைகள் மற்றும் மரக் கட்டைகளைப் பயன்படுத்தி ஷேக் முஜிபுர் ரகுமானின் உருவப்படத்தைச் சேதப்படுத்தியுள்ளனர்.

ஈரான்

## ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை



ஈரான் என்ற நாடே இருக்காது எனத் தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப், அவர்கள் அழிக்கப்படுவார்கள் எனவும் எதுவும் மிச்சமிருக்காது எனவும் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது, ட்ரம்ப்பைக் கொலை செய்வதற்கு ஈரான் நாட்டில் சதி திட்டம் தீட்டப்பட்டு உள்ளது என்ற அதிர்ச்சி தகவல் வெளிவந்துள்ளது.

ஈரான் நாட்டின் குத்சு படையின் தலைவராக இருந்த காசிம் சுலைமானி என்பவர், கடந்த 2020ஆம் ஆண்டில் ஆளில்லா விமானம் கொண்டு நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து, அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப் மற்றும் முன்னாள் வெளியுறவு செயலாளர் மைக் பாம்பியோ உள்ளிட்டோருக்கு ஈரானிலிருந்து கொலை மிரட்டல்கள் விடப்பட்டன. இதன் விளைவாக ட்ரம்ப்புக்கு எதிராகத் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் வருகின்றன. இந்த ஈரானின் சதி முறியடிக்கப்பட்டதாகக் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நீதித்துறை அறிவித்தது.

இந்நிலையில் ஈரான் மீது அதிகப்படியான அழுத்தம் கொடுக்கும் உத்தரவுகளில் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார். அப்போது செய்தியாளர்களைச் சந்தித்த அவர் ஈரான் தன்னைக் கொன்றால் அதை அழிக்க வேண்டும் என்று ஆலோசகர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

மேலும், ஈரான் என்ற நாடே இருக்காது அவர்கள் அழிக்கப்படுவார்கள், எதுவும் மிச்சமிருக்காது என கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மியான்மர்

### ஆங் சான் சூகியின் வீட்டை

## ஏலம் விட்ட மியன்மார் அரசுக்கு ஏமாற்றம்

மியன்மாரில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகியின் வீட்டை அந்த நாட்டு அரசாங்கம் ஏலம் விட்டது. இருப்பினும் அந்த வீட்டை யாரும் வாங்க முன்வராததால், அந்நாட்டு ஏமாற்றம் அடைந்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகச் சிறையிலிருந்து போராடியவர் ஆங் சான் சூகி. இதற்காக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றிருந்தார். இவருடைய தொடர் போராட்டம் காரணமாக அங்கு இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டது.

தொடர்ந்து, அங்கு 2015ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் ஆங் சான் சூகி வெற்றி பெற்று அந்த நாட்டின் தலைவராகப் பதவியேற்றார். 2020ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 81 சதவீத வாக்குகளைப் பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தார்.

2021ஆம் ஆண்டு, அந்த நாட்டை மீண்டும் இராணுவம் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது. இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் உள்ள ஆங் சான் சூகியை விடுதலை செய்யக்கோரி அங்கு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் மீது அந்த நாட்டின் இராணுவம் கோர முகத்தைக் காட்டி அடக்கி வருகிறது. மியன்மாரில் கடுமையான நிதி நெருக்கடி நிலவி வரும் நிலையில், ஆங் சான் சூகிக்கு சொந்தமான சொத்துகளை இராணுவம் விற்று பொருளாதார இழப்பை சரிக்கட்டி வருகிறது.



இராணுவ நெருக்கடி நிலையின்போது, ஆங் சான் சூகியின் அடைக்கப்பட்டிருந்த வீடு கையகப்படுத்தப்பட்டது. மேலும், அதனை ஏலம் விட இராணுவம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் ஏலம் விடப்பட்ட அந்த வீட்டை யாரும் வாங்க முன்வரவில்லை.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னமாகக் கருதப்படும் அந்த குட்டி பங்களா, யங்கூனில் உள்ள இனியே ஏரிக்கரையில் கட்டப்பட்டது. சூகியின் தந்தையும், அந்த நாட்டின் விடுதலை போராட்ட வீரரான இராணுவ தளபதி ஆங் சாங்கும் வசித்து வந்த பூர்வீக வீடாக அது உள்ளது. அந்த வீடுதான் ஆங் சான் சூகி 15 ஆண்டுகளுக்கு மேலாக சிறை வைக்கப்பட்டு அறவழியில் போராட வழிவகுத்தது. மேலும் நோபல் பரிசையும் பெற்றுத் தந்தது.

அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, ஹிலாரி கிளிண்டன், ஐ.நா சபை முன்னாள் பொதுச்செயலாளர் பான்-கி-மூன் முதலியவர்கள் அந்த வீட்டில் வைத்துத்தான் ஆங் சான் சூகியை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

ஏலம் விடும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. இதனால், மியானரில் ஆளும் இராணுவ அரசுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. ஆங் சான் சூகியின் வீட்டை இராணுவத்தால் ஏலம் விட இது மூன்றாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

## ஜனாதிபதி மாளிகையில் திருமணம்

ஜனாதிபதி மாளிகையில் முதன்முறையாகத் திருமண விழா நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் பாதுகாப்புப் பணிக்குத் தலைமையேற்று இருக்கும் சி.ஆர்.பி.எப். வீராங்கனை பூனம் குப்தாவிற்கும், ஜம்மு காஷ்மீரில் பணியில் உள்ள சி.ஆர்.பி.எப். வீரரான துணை தளபதி அவினாஷ் குமாருக்கும் வரும் 12ஆம் திகதி, ஜனாதிபதி மாளிகையில் திருமணம் நடைபெறவுள்ளது.

இது ஜனாதிபதி மாளிகையின் வரலாற்றில் நடைபெற உள்ள முதல் திருமண விழாவாகும்.



பணியில் பூனம் குப்தாவின் அர்ப்பணிப்பு, தொழில் திறன் மற்றும் நடத்தை விதிகளைப் பின்பற்றுவதில் உள்ள கண்டிப்பு போன்றவற்றின் காரணமாக, அவரது திருமணத்தை ஜனாதிபதி மாளிகையில் நடத்த ஜனாதிபதி திரவுபதி முர்மு அனுமதி அளித்துள்ளார் என கூறப்படுகிறது.

> **இந்த திருமண விழாவில், மணமக்களின் பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் கலந்து கொள்வார்கள்**

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இந்த திருமண விழாவில், மணமக்களின் பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் இலங்கை



அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்ற நிலையில், காலியில் வியாழக்கிழமை (06) ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தனஞ்சய டி சில்வா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். இலங்கை சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய ஒஷாத பெர்ணாண்டோ, ஜெஃப்ரி வன்டர்சே, அசித பெர்ணாண்டோவை பதும் நிஸங்க, ரமேஷ் மென்டிஸ், லஹிரு குமார பிரதியிட்டிருந்தனர். அவுஸ்திரேலியாவில் டொட் மேர்பியை கூப்பர் கொனோலி பிரதியிட்டு டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்டார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரம்பத்திலேயே நிஸங்கவை லையனிடம் இழந்தது. பின்னர் திமுத் கருணாரத்னவும், தினேஷ் சந்திமாலும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், 36 ஓட்டங்களுடன் லையனிடம் கருணாரத்ன வீழ்ந்தார். தொடர்ந்து வந்த அஞ்சலோ மத்தியூஸும் லையனிடம் உடனே விழ, சிறிது நேரத்திலேயே கமிந்து மென்டிஸும் ட்ரெவிஸ் ஹெட்டிடம் வீழ்ந்தார். அடுத்து வந்த தனஞ்சய டி சில்வாவும் உடனேயே மிற்செல் ஸ்டார்க்கிடம் வீழ்ந்தார்.

சிறிது நேரத்தில் 74 ஓட்டங்களுடன் மத்தியூ குனுமென்னிடம் சந்திமால் வீழ்ந்தார். அடுத்து வந்த குசல் மென்டிஸும், ரமேஷ் மென்டிஸும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 28 ஓட்டங்களுடன் ஸ்டார்க்கிடம் ரமேஷ் மென்டிஸ் வீழ்ந்ததோடு, அடுத்த பந்திலேயே பிரபாத் ஜெயசூரியவும் வீழ்ந்தார்.

> **அடுத்து வந்த குசல் மென்டிஸும், ரமேஷ் மென்டிஸும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 28 ஓட்டங்களுடன் ஸ்டார்க்கிடம் ரமேஷ் மென்டிஸ் வீழ்ந்ததோடு, அடுத்த பந்திலேயே பிரபாத் ஜெயசூரியவும் வீழ்ந்தார்**

தொடர்ந்து வந்த நிஷான் பீரிஸும் குனுமென்னிடம் விழ நேற்றைய முதல்நாள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் இலங்கை பெற்றுள்ளது. தற்போது குசல் மென்டிஸ் 59 ஓட்டங்களுடனும், லஹிரு குமார ஓட்டமெதுவும் பெறாமலும் களத்திலுள்ளனர்.

## புத்தளம் லிவர்பூலுக்கு உபகரணங்கள் கையளிப்பு

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் 2024ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து புத்தளம் மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்றுள்ள கழகங்களுக்கும் விளையாட்டு பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. அந்தவகையில் அண்மையில் தனது காரியாலயத்தில் வைத்து விளையாட்டு உபகரணங்களை லிவர்பூல் கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் கையளித்தார்.

### இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடர்:

## வெளியேற்றப்பட்டது ஆர்சனல்



இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரிலிருந்து ஆர்சனல் வெளியேற்றப் பட்டுள்ளது.

விலகல் முறையிலான இத்தொடரின் தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்ற ஆர்சனல், வியாழக்கிழமை (06) அதிகாலை நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியிலும் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்று 0-4 என்ற மொத்த கோல் கணக்கில் தோற்று தொடரிலிருந்து வெளியேறியது.

நியூகாசில் சார்பாக ஜேக்கப் மேர்பி, அந்தனி கோர்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

### துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய அபிஷேக் ஷர்மா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இந்தியாவின் அபிஷேக் ஷர்மா முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளிலும் 164 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே 40ஆம் இடத்திலிருந்து 38 இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை அபிஷேக் ஷர்மா அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1. ட்ரெவிஸ் ஹெட், 2.அபிஷேக் ஷர்மா, 3.திலக் வர்மா, 4.பில் ஸோல்ட், 5. சூரியகுமார் யாதவ், 6.ஜொஸ் பட்லர், 7. பாபர் அஸாம், 8. பதும் நிஸங்க, 9. மொஹமட் றிஸ்வான், 10. குசல் பெரேரா.

இதேவேளை மேற்குறித்த போட்டிகளில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் வருண் சக்ரவர்த்தி, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர இப்போட்டிகளில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் ரவி பிஷ்னோய், 10ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.அகீல் ஹொஸைன், 2.அடில் ரஷீட், வருண் சக்கரவர்த்தி, 4.வனிது ஹசரங்க, 5.அடம் ஸாம்பா, 6.ரவி பிஷ்னோய், 7. மகேஷ் தீக்‌ஷன, 8.ரஷீட் கான், 9. அர்ஷ்டீப் சிங், 10.ஜொஃப்ரா ஆர்ச்சர்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங்க் ஐரீ, 3.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 4.மொஹமட் நபி, லியம் லிவிங்ஸ்டோன்.

இந்நிலையில், இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில் 141 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித், டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

இது தவிர குறித்த போட்டியில் 47 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையின் கமிந்து மென்டிஸ், ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜோ றூட், 2.ஹரி ப்றூக், 3.கேன் வில்லியம்சன், 4.யஷஸ்வி ஜைஸ்வால், 5. ஸ்டீவன் ஸ்மித், 6.கமிந்து மென்டிஸ், 7.ட்ரெவிஸ் ஹெட், 8.தெம்பா பவுமா, 9.றிஷப் பண்ட், 10.சௌட் ஷகீல்.

மேற்படி டெஸ்டில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் நேதன் லையன், எட்டாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா, 3.பற் கமின்ஸ், 4.ஜொஷ் ஹேசில்வூட், 5.நொமன் அலி, 6.நேதன் லையன், 7.மார்கோ ஜன்சன், 8.மற் ஹென்றி, 9.இரவீந்திர ஜடேஜா, 10.பிரபாத் ஜெயசூரிய.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1. இரவீந்திர ஜடேஜா, 2.மார்கோ ஜன்சன், 3.மெஹிடி ஹஸன் மிராஸ், 4.பற் கமின்ஸ், 5.ஷகிப் அல் ஹஸன்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 07 பெப்ரவரி 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.